# நிதிய முகாமையாளரின் அறிக்கை

**அன்பார்ந்த முதலீட்டாளருக்கு,**

30 செப்டம்பர் 2024 இல் நிறைவடைந்த காலத்திற்கான CT CLSA கிள்ட் எட்ஜ் நிதியத்தின் அரையாண்டு அறிக்கையினை சமர்ப்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

**பொருளாதார மீளாய்வும் கண்ணோட்டமும்**

இலங்கையின் பொருளாதாரமானது வருடத்திலிருந்து வருடமாக 2024 இன் 2ஆம் காலாண்டில் +4.71%[1] ஆல் விரிவடைந்தவேளை, இது கடந்த வருடத்தில் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது வருடத்திலிருந்து வருடம் -3.0%[1] வீழ்ச்சியினைக் கண்டிருந்தது. இதன் விளைவாக 2024 இன் முதலாம் அரையாண்டில் பொருளாதாரமானது வருடத்திலிருந்து வருடமாக +5.0%[1] ஆல் விரிவடைந்தது. 2024 இன் 2ஆம் காலாண்டின்போது பொருளாதாரத்தின் மூன்று துறைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் சேவைகள் துறையானது முறையே வருடத்திலிருந்து வருடம் +1.7%[1], +10.9%[1] மற்றும் +2.5%[1] சாத்தியமான வளர்ச்சியினை பதிவுசெய்தன. ஜூன் 2024 இல் பிரசுரிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பணியாளர்கள் அறிக்கையின் பிரகாரம், இலங்கையின் பொருளாதாரமானது 2024 இல் வருடத்திலிருந்து வருடம் +2.0%[2] ஆல் விரிவடையும் எனவும் 2025 இன் இறுதியில் விரைவான வேகத்தில் +2.7%[2] ஆல் வளர்ச்சியடையும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியின் பின்னர் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட பொருளாதார மற்றும் கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் அதன் இறைவரி நிலைமையினை பலப்படுத்துவதற்கும் விலை மட்டங்களை உறுதிப்படுத்துவதற்கும் துணைபுரிந்துள்ளதுடன், இதன் காரணமாக இலங்கை மத்திய வங்கி (இ.ம.வ.) அதன் தளர்வான கொள்கை நிலைப்பாட்டினை பராமரிப்பதற்கு அனுமதித்துள்ளது. இதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரமானது அதன் மீட்சியினை 2024 இன் இரண்டாம் அரையாண்டின் இறுதியிலும் தொடரும் என நாம் எதிர்பார்க்கின்றோம். வெளிவாரி துறையினைப் பொறுத்தளவில், சுற்றுலாத்துறை வருமானம் மற்றும் தொழிலாளர் பணமனுப்பல்கள் ஆகியவற்றிலான குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் வருடத்திலிருந்து வருடம் விரிவடையும் வர்த்தகப் பற்றாக்குறையின் தாக்கத்தினை தணித்துள்ளதுடன் 2024 இன் முதல் ஒன்பது மாதங்களில் வெளிவாரி நடைமுறைக் கணக்கில் ஒரு சென்மதி நிலுவை மிகையினை விளைவித்துள்ளது. நாட்டிற்கான டொலர் உட்பாய்ச்சல்களிலான மேற்குறிப்பிட்ட முன்னேற்றத்துடன், வெளிவாரி கடன் மீள்செலுத்துகைகளின் இடைநிறுத்தலும் சேர்ந்து சந்தை தலையீடுகளினூடாக இலங்கை மத்திய வங்கி (இ.ம.வ.) அதன் அந்நிய செலாவணி ஒதுக்கங்களை பலப்படுத்துவதனை இயலுமையாக்கியுள்ளது. உறுதியான மற்றும் முன்னேற்றமடையும் பாரிய பொருளாதார குறிகாட்டிகள், தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியின் அரசியல் கட்சியானது சமீபத்தில் நிறைவடைந்த பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையினை பெற்றுக்கொண்டது மற்றும் நடந்துகொண்டிருக்கின்ற ச.நா.நி. இன் நீடிக்கப்பட்ட நிதி வசதித் (IMF EFF) திட்டத்தில் நிலைத்திருப்பதற்கான அரசாங்கத்தின் விருப்பம் என்பவற்றை நாம் சாத்தியமாகப் பார்க்கின்றோம்.

இலங்கை ரூபாவின் பலம், சாதகமான உலகளாவிய பண்டங்களின் விலைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு படிப்படியான மீட்டலுக்கு இடையில் பணவீக்க அழுத்தங்கள் தொடர்ந்தும் தணிவுற்றதனால் 2024 இன் போது இ.ம.வ. அதன் நாணயக் கொள்கை தளர்த்தலை தொடர்ந்தது. இதன் விளைவாக, இ.ம.வ. 2024 இன் முதல் ஒன்பது மாதங்களில் அதன் கொள்கை வட்டி வீதங்களை 75 அடிப்படை புள்ளிகளினால் குறைத்ததுடன் நிலையியல் வைப்பு வசதி வீதமும் நிலையியல் கடன் வழங்கல் வசதி வீதமும் முறையே 8.25% மற்றும் 9.25% ஆக காணப்பட்டன. நெருங்கிய கால பணச்சுருக்கமானது எதிர்பார்த்ததிலும் பார்க்க ஆழமாக இருத்தல், வெளிவாரித் துறையிலான முன்னேற்றம், எதிர்கால பணவீக்க எதிர்பார்ப்புக்களின் மிதமான தன்மை மற்றும் சந்தை கடன் வழங்கல் வட்டி வீதங்கள் கீழ்நோக்கி செம்மையாக்கப்படுவதற்கான இடமின்மை என்பவற்றுக்கு இடையில் கொள்கை வட்டி வீதங்களை தளர்த்துதல் அவசியம் என்னும் கருத்தினை இ.ம.வ. இன் நாணயச் சபை கொண்டிருந்தது.

[1] சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், தேசிய கணக்குகள் 2024 இன் 2ஆம் காலாண்டு
[2]https://www.imf.org/en/Publications/CR/Issues/2024/06/13/Sri-Lanka-2024-Article-IV-Consultation-and-Second-Review-Under-the-Extended-Fund-Facility-550261

3 மாதங்கள், 6 மாதங்கள் மற்றும் 12 மாதங்கள் திறைசேரி உண்டியல்களின் விளைவுகள் 2024 செப்டம்பர் இறுதியில் முறையே 10.49%[3], 10.72%[3] மற்றும் 10.05%[3] ஆக காணப்பட்டன. அரசாங்கப் பிணையங்களுக்கான விளைவுகளிலான வீழ்ச்சிக்கேற்ப சந்தை வட்டி வீதங்கள் கீழ்நோக்கி செம்மையாக்கப்பட்டதுடன், நாணய நிலைமைகள் மற்றும் சந்தை திரவத்தன்மை என்பவற்றிலான முன்னேற்றத்திற்கு மத்தியில் AWPLR செப்டம்பர் மாதத்தின் இறுதியில் 9.32%[4] ஆக காணப்பட்டது.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டியினால் (CCPI) அளவிடப்படும் புள்ளியிலிருந்து புள்ளியிலிருந்தான பணவீக்கமானது செப்டம்பர் 2024 இல் -0.5%[5] பணச்சுருக்க எல்லையினுள் நிறைவடைந்தது. உணவு (வருடத்திலிருந்து வருடம் -0.3%) மற்றும் உணவல்லா (வருடத்திலிருந்து வருடம் -0.5%) பிரிவுகள் நிர்வாக ரீதியாக தீர்மானிக்கப்பட்ட விலைகளுக்கான கீழ்நோக்கிய செம்மையாக்கல்கள் மற்றும் வழங்கல் நிலைமைகளிலான முன்னேற்றங்களுக்கு மத்தியில் செப்டம்பர் மாதத்தில் பணச்சுருக்கத்தினை பதிவுசெய்தன. அதேவேளை, தேசிய நுகர்வொர் விலைச் சுட்டியினால் (NCPI) அளவிடப்படும் பணவீக்கமானது செப்டம்பர் 2024 இல் ஒரு புள்ளியிலிருந்து புள்ளி அடிப்படையில் -0.2%[7] ஆக நிறைவடைந்தது. இ.ம.வ. ஆனது நடைமுறையிலுள்ள பணச்சுருக்க நிலைமைகள் அடுத்த சில மாதங்களுக்கு நிலைத்திருக்கும் எனவும் அதன் பின்னர் படிப்படியாக அதன் இலக்குவைத்த மட்டமான 5% உடன் இணையும் எனவும் எதிர்பார்க்கின்றது.

அதேவேளை செப்டம்பர் 2024 இன் இறுதியில் சீனாவின் பீப்பள்ஸ் வங்கியுடனான பரிமாற்ற வணிகம் உள்ளடங்கலான, இது அமெரிக்க டொலர்கள் 1.4 பில்லியன் ஆகும் என்பதுடன் பயன்படுத்தல் நிபந்தனைக்கு உட்பட்டது, மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கமானது அமெரிக்க டொலர்கள் 6.0 பில்லியனாக[8] காணப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உடனடியான நெருங்கிய காலத்தில் சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பணமனுப்பல்களிலான திடமான பருவகால டொலர் உட்பாய்ச்சல்களினால் துணையளிக்கப்பட்டு இலங்கை ரூபாயானது திடமாகக் காணப்படும் என நாம் எதிர்பார்க்கின்றோம். எவ்வாறாயினும், தொடர்ச்சியான நாணயக்கொள்கை தளர்த்தல், இறக்குமதி கட்டுப்பாடுகளிலான தளர்த்தல் (குறிப்பாக வாகன இறக்குமதி தளர்த்தல்) மற்றும் வெளிவாரி கடன் மற்றும் வட்டி மீள்செலுத்தலின் மீள் ஆரம்பம் என்பன 2025 இன் இறுதியில் ரூபாயில் அழுத்தத்தினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்டின் ஆரம்பத்திலிருந்து நாளிதுவரைக்குமான அடிப்படையில் இலங்கை ரூபாயானது +8.2% ஆல் பெறுமதி உயர்வடைந்து செப்டம்பர் 2024 இன் இறுதியில் டொலருக்கு எதிராக ரூபா 299.4 ஆக காணப்பட்டது.

---

[3] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/press/pr/press_20240927_treasury_bill_issuance_held_on_25_september_2024_e.pdf

[4] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/statistics/wei/WEI_20240927_e.pdf

[5] சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், CCPI இன் அசைவுகள், பக்கம் 01

[6] சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், உணவு மற்றும் உணவல்லா பணவீக்கம், பக்கம் 01

[7] சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், NCPI இன் அசைவுகள், பக்கம் 01

[8] இலங்கை மத்திய வங்கி, வாராந்த பொருளாதார குறிகாட்டிகள் - 18 ஒக்டோபர், பக்கம் 15

**நிதியத்தின் செயற்திறன்**

30 செப்டம்பர் 2024 இல் நிதியத்தின் அலகொன்றின் தேறிய சொத்தின் பெறுமதியானது ரூபா 16.5873 ஆக காணப்பட்டவேளை இது செப்டம்பர் 2024 இன் இறுதிவரைக்குமான வருட ஆரம்பித்திலிருந்தான விளைவாக 7.9% (ஆண்டு வாரியாக்கப்படாதது) இனை விளைவித்தது. 30 செப்டம்பர் 2024 இல் உங்களது நிதியத்தின் முதலீடுகள் முற்றிலுமாக மீள்கொள்வனவு உடன்படிக்கைகளைக் கொண்டிருப்பதுடன், இது தளம்பல்களிலிருந்து நாளாந்த விளைவினை பாதுகாக்கின்றது.